REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 3] சென்னை: ஆனி 6உ திங்கள் (20—6—55) ★ ★ வெளியூர்: ஆனி 7உ செவ்வாய் (12—6—55) [இதழ் 5

12 உயிர்களுக்கு ரூ. 12 லட்சம் நஷ்ட ஈடு

பாகிஸ்தானிடம் இந்திய சர்க்கார் கோரிக்கை

நிக்கோபாவில் கடந்த மே மாதம் 9-ந் தேதி நடைபெற்ற சம்பவத்தில் 6 இந்திய விமானிகளும், 6 இந்தியர்களும் கொல்லப் பட்டதைக் குறித்து பாகிஸ்தான் சர்க்காரிடம் இந்தியப் பேரரசு ரூ. 12 லட்சம் நஷ்ட ஈடு கோரியிருப்பதாகத் தெரிகிறது.

இந்தக் கோரிக்கை பற்றி பாகிஸ்தான் இன்னும் யோசித்துக் கொண்டிருக்கிறதாம்.

'கல் நாட்ட வாரும்' — பக்தவத்சலத்திற்கு அன்பழைப்பு!

'நீர் கல் நாட்டக் கூடாது' - உள்ளூர் காங்கிரஸ் கட்சியினரின் கண்டிப்பு!

சகலர் அழகேசனுடன் சென்ற அமைச்சர் அவதியுடன் திரும்பினர்

இராமேசுவரம், ஜூன் 17—

இராமேசுவரத்தில் நிறுவத் தீர்மானிக்கப்பட்டிருக்கும் உயர் நிலைப் பள்ளிக்கு யார் கால்கோள் விழா செய்வது ? முன்னாள் மராமத்து மந்திரியாகவும், இந்நாள் விவசாய, தொழில் மந்திரியாகவும் இருந்துவரும் அமைச்சர் பக்தவத்சலமா, அல்லது மராமத்து மந்திரியாக இருந்துவரும் சண்முக இராஜேசுவர சேதுபதியா ?—என்பதில் சிக்கல் ஏற்பட்டு விட்டது காங்கிரஸ் கட்சியினருக்குள் !

இராமநாதபுரம் மாவட்டக் கழகத் தலைவர் எஸ். இராமசாமி (நாயுடு) அவர்கள், தேதி குறிப்பிட்டு, அமைச்சர் பக்தவத்சலத்தை கல்நாட்டு விழாவாற்றுவதற்காக அன்பழைப்பும் அனுப்பிவிட்டார்.

அன்பழைப்பை ஏற்றுக்கொண்டு, தனது சகலரான இரயில்வே துணை அமைச்சர் அழகேசனையும் அழைத்துக் கொண்டு, பள்ளிக்கூடத்திற்கு அஸ்திவாரக் கல் நாட்ட இராமேசுவரம் போய்ச் சேர்ந்தார், அமைச்சர் பக்தவத்சலம் !

அந்தத் தொகுதி மாவட்டக் கழக உறுப்பினரான பத்ருதீன் என்பவர், உள்ளூர் காங்கிரஸ் கட்சியினரை அழைத்துக்கொண்டு, அமைச்சர் பக்தவத்சலத்தைப் பார்த்து, 'நீங்கள் அஸ்திவாரக் கல் நாட்டக் கூடாது,' எனக் கண்டிப்பாகக் கூறினர்.

அமைச்சரோ, 'என்னைக் கல் நாட்ட அழைத்தவர் மாவட்டக் கழகத் தலைவராவார்; அந்த அழைப்பை ஒப்பியே நான் வந்திருக்கிறேன்; 'அப்பணியினைச் செய்யக் கூடாது' என, என்னைக் கேட்டுக்கொள்வது முறையல்ல; என்னை அழைத்த மாவட்டக் கழகத் தலைவரிடம் உங்கள் கருத்தைக் கூறுங்கள்,' என, உள்ளூர் காங்கிரஸ் தூதுக் குழுவிடம் கூறிவிட்டார்.

(4-ம் பக்கம் பார்க்கவும்)

ஸ்டாலின் கிராடில் பண்டித நேரு

ஜூன் 23-ல் கூட்டறிக்கை

மாஸ்கோ, ஜூன் 19—

பிரதமர் நேருவும், அவர் குழுவினரும் இன்று லெனின்கிராட் வந்தனராம்.

மீண்டும் பண்டிதர், மாஸ்கோவிற்கு ஜூன் 21-ந் தேதி வருவார் என்றும், அப்போது மீண்டும் ரஷ்யத் தலைவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்துவதுடன் அவர்களுக்கு விருந்தொன்றும் தருவார் என்றும் தெரிய வருகிறது.

அத்துடன், ஜூன் 23-ந் தேதியன்று புது டில்லியிலும், மாஸ்கோவிலும் ஒரே நேரத்தில் அறிக்கை ஒன்று வெளியிடப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தமிழர்களை துன்புறுத்தும் வடநாட்டுகப்பல்கம்பெனி

சென்னை—இரங்கூன் போக்குவரத்துக்கு மூடுவிழா !

கட்டணத்தை உயர்த்தும் கருத்தற்றச் செயலா?— சென்னையில் கண்டனம்

சென்னை, ஜூன் 19—

சென்னையிலிருந்து இரங்கூனுக்குச் செல்லும் கப்பல் போக்குவரத்து நிறுத்தப்படும் என்று தெரியவருகிறது. இதனால், இந்தக் கப்பல் வழியைப் பயன்படுத்தி வரும் 10,000 பிரயாணிகள்—பெரும் பாலானோரான தமிழர்கள் பாதிக்கப்படுவர் என்று அஞ்சப்படுகிறது.

இந்தப் போக்குவரத்தை நிர்வகித்து வருபவர்கள் 'சிந்தியா ஸ்டீம்ஷிப் கம்பெனி'யினராவர்.

இதுவரையிலும் 'எஸ். எஸ். ஜலகோபால்' என்ற ஒரே ஒருகப்பல் மட்டுமே சென்னை-இரங்கூனுக்கிடையில் போய் வந்துகொண்டிருந்தது; அந்தக் கப்பல் ஜூன் 13-ல், இரங்கூனிலிருந்து சென்னை வந்து சேர்ந்தது; ஜூலை 3-ந் தேதி மீண்டும் இரங்கூனுக்குப் புறப்படவேண்டும்; ஆனால், அக்கப்பல், மீண்டும் இரங்கூனுக்குப் புறப்பட்டுச் செல்லாது என்றும், சென்னையிலிருந்து கிளம்பி அது பம்பாய் சென்றுவிடும் என்றும் கூறப்படுகிறது.

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க.)

லோகியா காஞ்சீபுரம் வரக்கூடாதாம்!

தமிழ்நாடு ம. சோ. கட்சி மாநாட்டு அழைப்பு ரத்து

சென்னை, ஜூன் 19—

காஞ்சீபுரத்தில் ஜூன் 24, 25, 26-ந் தேதிகளில் நடைபெறவிருக்கும் தமிழ் நாடு ம. சோ. கட்சி மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு டாக்டர் ராம் மனோகர் லோகியா, பி. வி. ஜி. ராஜு எம். எல். ஏ. ஆகியோருக்கு அனுப்பியிருந்த அழைப்புகளை ரத்து செய்துவிட்டதாக தமிழ் ம. சோ. கட்சித் தலைவரும், தேசீய நிர்வாகக் குழு உறுப்பினருமான பி. எஸ். சின்னதுரை கடிதம் எழுதியிருப்பதாகத் தெரிகிறது.

டாக்டர் லோகியா மாநாட்டைத் துவக்கி வைக்கவும், தோழர் ராஜு மாநாட்டில் பேசவும் அழைக்கப்பட்டிருந்தார்கள்.

அவர்கள் இருவரும் கட்சியின் கட்டுப்பாடுகளை மீறியுள்ளதாகவும், தேசீய நிர்வாகக் குழுவின் முடிவு சரியானதென தமிழ் நாடு ம சோ கட்சி கருதுவதாகவும், அவர்கள், கட்சியின் ஒழுங்கை மீறி நடந்து கொள்வதை பொறுத்துக்கொள்ள முடியாதெனவும், எனவேதான், அழைப்புகளை ரத்து செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருப்பதாயும் தோழர் சின்னதுரை தமது கடிதத்தில் குறிப்பிட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

யுத்தங்கள் வராதிருக்க!

ஐதராபாத், ஜூன் 19—

"வருங்காலத்தில் யுத்தங்கள் நடைபெற்றால், மனிதவர்க்கமே அழிய வேண்டியதுதான் என்பதை உணர்ந்து, உலக நாடுகள், ஒருவர் பிரச்சினையில் மற்றவர் தலையிடாமல் இருந்தால் இனி யுத்தங்களே ஏற்படாது,"

என்று, இங்கு நடைபெற்ற கூட்டமொன்றில் டாக்டர் இராசேந்திர பிரசாத் குறிப்பிட்டிருக்கிறார்.

உரிமைப் போர் வரலாற்றுக் குழு கலைக்கப்படுமாம்!

சரித்திர நோக்கற்றவர்களை குழுவில் சேர்த்ததின் எதிரொலி!

இந்திய அரசியல் உரிமைப் போர் பற்றிய வரலாற்றைத் தொகுத்து வெளியிட இந்தியப் பேரரசால் நியமிக்கப்பட்ட குழு, டிசம்பர் மாத இறுதியுடன் கலைக்கப்பட்டுவிடுமென நம்பப்படுகிறது. அப்பணிக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்படலாம் என்றும் தெரியவருகிறது.

மேற்படி குழு கலைக்கப்படுவதற்கான காரணம் விளக்கமாகத் தெரியவில்லையானாலும், இத்துறையில் ஒவ்வொரு மாநிலத்திலும் நியமிக்கப்பட்டுள்ள குழு பணியாற்றும் போக்கு அவ்வளவு திருப்திகரமானதாக இல்லாததே, கலைப்புக் கருத்துக்குப் பொருந்தக்கூடிய காரணமாக இருக்க வேண்டும் என யூகிக்கப்படுகிறது.

நியமிக்கப்பட்டுள்ள மாநிலக் குழுக்களில் சரித்திர நோக்கற்றவர்கள் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டிருப்பதே, பலவிதத் தடைகளை ஏற்படுத்துவதாக உள்ளது. சில வரையறுக்கப்பட்ட அரசியல் கண்ணோட்டத்துடன் உரிமைப் போர் வரலாற்றை ஆக்க வேண்டும் என்று சரித்திர நோக்கற்றவர் வலியுறுத்துவதை, வரலாற்று ஆசிரியர்கள் ஏற்க மறுக்கின்றனர். எல்லா இனங்களிலும் வரலாற்று ஆசிரியர்கள் இயற்றிய கருத்துக்கள், மகிழ்ச்சிகரமாக வரவேற்கப்படுவது கிடையாது.

இருந்துவரும் குழுவை ஒழித்துவிட்டு, மேற்படி பணியினை மேற்கொண்டு செய்துமுடிக்க வேறு ஒரு அமைப்பு உருவாக்கப்படுமா என்பது தெரியவில்லை ஆனால், இதுவரை, வரலாற்றைத் தொகுக்கத் தேவைப்படும் சான்றுகளுக்காக, மூன்றிலிருந்து நான்கு லட்ச ரூபாய் வரை செலவழிக்கப்பட்டிருக்கிறது.

இதுவரை குழு, முதல் பாகம் ஒன்றை ஆக்கி இருப்பதாகவும், டிசம்பர் மாதத்திற்குள் இரண்டாவது பாகமும் முடிவு பெற்றுவிடும் என்றும் நம்பப்படுகிறது. தனி வரலாற்று ஆசிரியர்களைக்கொண்டு இறுதியான மூன்றாவது பாகத்தையும் எழுதி முடிக்க இந்தியப் பேரரசு முன் வரக்கூடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

திட்டம் பலன்தர துவங்குகிறது!

பூனா, ஜூன் 19—

பூனா அருகே பிம்ப்ரி எனுமிடத்தில் உருவாக்கப்படும் சர்க்கார் பெனிசிலின் உற்பத்திசாலையில், வரும் ஆகஸ்டு மாதத்திலிருந்து மருந்து உற்பத்தி துவங்கும் எனத் தெரிய வருகிறது.

வருமானத்தின் மீதும் கட்டுப்பாடு விதிக்கப்படுமாம்!

சென்னை அரசாங்கம் ஆலோசிக்கிறதாம்!

சமதர்ம வடிவ சமுதாயத்தை உருவாக்க அரசாங்கம் எடுத்துக்கொள்ள இருக்கும் நடவடிக்கைகளில், நிலச் சீர்திருத்தமும், எல்லாத் துறைகளிலும் ஈடுபட்டிருப்பவர்களின் வருமானத்தைக் கட்டுப்படுத்துதலும் அடங்கியிருக்கின்றன.

—இந்த உண்மையை, திருநெல்வேலியில், ஆறாவது தேசியக் கண்காட்சியைத் திறந்து வைத்தபொழுது மருத்துவத்துறை அமைச்சராக இருக்கிற ஏ. பி. ஷெட்டி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

முதல் முதலாக நிலச் சீர்திருத்தம் செய்வதென அரசாங்கம் முன்வந்திருப்பதினாலேயே, மற்றத் தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்கள் தங்கள் விருப்பப்படி பொருளீட்டுவதில் நடந்துகொள்ளலாம் என்று எண்ணக்கூடாது என அமைச்சர் மேலும் கூறினார்.

இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தின் நோக்கம்பற்றி அவர், மக்களுக்கிடையேயுள்ள பொருளாதார வேற்றுமையைக் குறைப்பதும், தொழில் ஏற்பாட்டைத் தரிதப்படுத்துவதும், தேசிய செல்வத்தைப் பெருக்குவதும், உற்பத்தியைக் கூட்டுவதுமாகும் எனக் குறிப்பிட்டார்.

வரி கொடுப்பதைத் தவிர்க்க மக்கள் முயலக்கூடாது என்றும், அதற்குப் பக்கத் துணையாக வழக்கறிஞர்களும், கணக்காயர்களும் இருக்கக்கூடாது என்றும் அமைச்சர் அறிவித்தார்.

ஒவ்வொரு ஆண்டும் 45 லட்சம் நபர் வீதம் மக்கள் தொகை பெருகுவதாகவும், ஒவ்வொரு ஆண்டிலும் 18 லட்சம் மக்களே வேலை பெறுவதற்கான வாய்ப்பு இருந்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 20—6—'55 திங்கள்

எச்சரிக்கிறோம்!

நிலச் சீர்திருத்தம் பற்றியும் அவை செய்யப்பட வேண்டிய முறை பற்றியும் தி. மு. கழகம் தன் கருத்துக்களை ஏற்கனவே தெரிவித்திருக்கிறது.

நிலத்தில் உழைப்பவர் விவசாயிகள்; ஆனால், அந்த உழைப்பின் பலன் பெறுவோர் நிலப் பிரபுக்கள்!

உழைக்கும் விவசாயி பெறும் பலனோ வறுமை—வாட்டம்! பட்டினி—பரிதவிப்பு!!

உழைக்காமல் — ஆனால், 'நிலம் என்னுடையது' என்ற உரிமை மட்டும் கொண்ட நிலப் பிரபு பெறுவதோ, வளமான வாழ்வு! சுகபோகம்!!

இந்தக் கொடுமை அகல, தி.மு. கழகம் தன்னாலானதைச் செய்யத் தவறியதில்லை.

அதுமட்டுமின்றி, இந்தக் கொடுமை குறைக்கப்படுவதற்கான வழிவகைகளையும் கூறாமலிருந்ததில்லை.

'நிலம் தனிப்பட்ட சிலரின் உடைமை என்ற நிலை மாற்றப்பட்டு, அந்த நிலம், உழுது பண்படுத்தி, பரம்படித்து, உரமிட்டு, விதைத்து, நீர் பாய்ச்சி, களை எடுத்து, காத்து, அறுத்து, களம் சேர்த்து, பதர் நீக்கி, களஞ்சியம் சேர்க்கும் விவசாயப் பெருமக்களுக்கே சொந்தமானதாயிருக்க வேண்டும்,' என்றும் கருத்துரை கூறியிருக்கிறது.

மேலும், 'நிலம், விவசாயிகளுக்குப் பிரித்துக் கொடுக்கப்பட்டால் மட்டும் போதாது—பிரித்துத் தரப்படும் நிலங்களை கூட்டுப்பண்ணை முறையில்—வேறு பல தொழில்களுக்கும் கிடைக்கும் பாதுகாப்புடன் நவீனகால விஞ்ஞான முறைப்படி விவசாயம் செய்தால்தான் விவசாயத் தொழிலும் வளரும்; அத்தொழிலில் ஈடுபடும் விவசாயிகளும் தகுந்த பலன் பெறுவர்,' என்றும் எடுத்துக் காட்டியுள்ளது.

அன்றியும் 'விவசாயத்தை மட்டும் நம்பிக்கிடக்கும் தொழிலாளர்களின் பெரும் எண்ணிக்கையைக் குறைத்து, அவர்களுக்கெல்லாம், நாட்டினைத் தொழில் மயமாக்குவதின் மூலம் வேறு வேலை தந்து, பொதுவாக மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் வேண்டும்,' என்பதையும் நிலப்பிரச்சினைக்குள்ள பரிகாரங்களில் ஒன்ருக தி. மு. கழகம் கடந்த காலத்தில் எடுத்துக் கூறி வந்திருக்கிறது.

சென்னை அரசாங்கமும், தங்களை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் 'எதிர்காலத்தை' மனதில் கொண்டு, நிலச் சட்டத்தை கொண்டு வருவதாகக் கூறிக்கொண்டு வருகிறது—தீவிரமாக பிரச்சினையைக் கவனிப்பதுபோல காட்டிக் கொண்டிருக்கிறது.

காங்கிரஸ் மந்திரி சபை கொண்டு வரவிருக்கும் நிலச் சட்டம் எத்தகையதாயிருக்கும்—இருக்க முடியும் என்பதை ஓரளவு யூகிக்க முடிகிறது என்றாலும், அதுபற்றி எழுதுவதற்கு இன்னும் காலம் கனியவில்லை.

ஆனால், அந்த நிலச்சட்டத்தின் உருவமல்ல—அது 'கருக்கொண்டிருப்பதே நிசம்தானா?'—என்ற ஐயப்பாடு பலருக்கிருக்கும் இன்றைய நிலையிலேயே, பலர் தங்கள் தங்கள் எண்ணத்தை அதுபற்றிவெளிப்படுத்தி வருகின்றனர்.

சென்னை மந்திரி சபை உபகுழு தயாரித்துள்ள நகல் சட்டம் பற்றி மந்திரி சபைக்குள்ளேயே உள்ளடிக் குழப்பம் இருப்பதும் பலருக்குத் தெரியாமலில்லை!

ஆனாலும், 'நிலச்சட்டம் எப்படிப்பட்டது,' என்பதைத் தெரிந்துகொள்ளுமுன்பே, 'தங்களுக்கு எங்கே ஆபத்து வந்துவிடுகிறதோ,' என்று அஞ்சி, 'மத நிறுவனங்களுக்கும், மடங்களுக்கும், ஆலயங்களுக்கும் சொந்தமாயிருக்கிற நிலங்களை பாதிக்கும் வகையில் சட்டமிருக்கக் கூடாது,' என்று, சர்க்காரை அச்சுறுத்த சிலர் முனைந்திருக்கின்றனர்.

மத பரிபாலன இலாகா தலைவரே இக்கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

வடபாதி மங்கலமும், குன்னியூராரும் போலத்தான்—திருவாவடுதுறையும், திருப்பனந்தாளும்! என்ன வேறுபாடு, இவர்களிடையே?

ஒரு நிலப் பிரபுவிடமிருக்கும் நிலத்தில் உழைத்து வாழ்வை ஓட்டும் விவசாயிகள் படும் துயரத்தில்—அனுபவிக்கும் வேதனையில், மடம்—கோயில் இவற்றிற்குச் சொந்தமான நிலத்தில் உழைக்கும் விவசாயிகள் அனுபவிக்கும் கொடுமை எள்ளளவும் குறைந்ததல்லவே!

அவர்கள் உழைப்பின்பலன், குன்னியூரார் குடும்பத்திற்கு மட்டும் கிடைப்பதைப்போல, திருவாவடுதுறை மடத்து ஆண்டிகளுக்கும், மீனாட்சி அம்மன் கோயில் அர்ச்சகர்களுக்கும் மட்டும்தான் கிடைக்கிறது.

நிலைமை அவ்வாறிருக்க, தனி மனிதர்களின் நிலஉடைமைக்கு மட்டும் வரம்பு கட்டப்படுவதும், அந்த வரம்பு, மத நிறுவனங்களை கட்டுப்படுத்தக் கூடாததாயிருப்பதும் எந்த விதத்தில் நியாயமாக இருக்க முடியும்?

சாதாரண மனிதர்களே, தாங்கள், பிறரின் உழைப்பில் உல்லாச வாழ்வு பெற்றிருப்பது கூடாதெனக் கூறிடும்போது, 'ஆண்டவனின் பிரதிநிதிகள்' என்போர் மட்டும் பிறர் உழைப்பில் உல்லாசத்தை அனுபவிக்க வழிகோல விடுவது என்ன நியாயம்?

மடங்கள்—கோவில்கள் எல்லாம் ஆண்டவன் பெயரால்—குறிப்பிட்ட ஒரு சிலரின் 'சொர்க்கலோக' வாழ்க்கைக்காக, ஏதுமறியாத ஏழைப் பாமரர் பல லட்சம் பேரின் வாழ்வைத் தட்டிப் பறிக்கும் கொடுமை ஆட்சிபுரியும் மண்டபங்கள்தானே!

'நிலமெல்லாம் தம்முடையதாக்கி வைத்திருக்கும் நிலப் பிரபுக்கள் அநீதியின் வடிவங்கள்,' என்றால், மடங்கள்—கோவில்கள் முதலியனவற்றின் அதிபர்கள், 'அநீதியின் பிறப்பிடங்கள்' அல்லவா?

நிலப் பிரபுக்கள், தாங்கள் உழைக்காமலே வாழ்வதற்கு வசதி செய்யும் நில உரிமையை தங்கள் 'பூர்வஜென்ம புண்ணிய'த்தினால் பெற்றிருப்பதாகக் கூறுகின்றனர்.

இந்தத் தீய எண்ணத்தை அவர்களுக்கு மட்டுமின்றி—'நாம் கஷ்டப்படுவது போன ஜென்மத்தில் செய்த பாவத்தினால்தான்,' என்று நம்பி மோசம் போகும் விவசாயிகளுக்கும், பொதுமக்களுக்கும் ஊட்டியிருப்பது — மதமும், அது கற்பிக்கும் கடவுளும் தான்! அந்த மதத்தைக் காப்பதற்கென இருக்கும் மடங்களிடமிருந்துதான், மக்களை ஏமாற்றிப் பறித்து வைத்திருக்கும் நிலமும் — சொத்தும், முதன் முதலில் பறிமுதல் செய்யப்பட வேண்டும்; அதுதான் நியாயமுங்கூட!

'எனவே நில உடைமைக்கு வரம்பு கட்டுவது,' என்று சென்னை சர்க்கார் முடிவெடுத்திருக்குமானால், அந்த முடிவு குன்னியூரார்களை மட்டும் பாதிப்பதாயிருந்து திருவாவடுதுறைகளைத் தீண்டாமலிருக்குமானால், அது, விவசாயப் பெருமக்களில் ஒரு பகுதியினருக்கு மட்டுமல்ல — பொதுவாக நாட்டு மக்கள் அனைவருக்குமே அரசாங்கம் இழைக்கும் அநீதியாகத்தான் இருக்க முடியும்; மேலும், சென்னை சர்க்காரின் 'பெரும் போக்கை' அளவிடும் கருவியாகவும் அந்தச் செயல் அமையும்!

மடங்களையும், கோவில்களையும் தங்கள் சுயநல—சுகபோக—சோம்பேறி வாழ்வுக்குப் பயன்படுத்தும் ஒரு சிலரின் கூச்சலுக்கு சென்னை சர்க்கார் செவிமடுப்பது, பெரும்பாலான மக்களின் கோபத்தைக் கிளறும் என்றும் எச்சரிக்கிறோம்.

இந்திய சர்க்காருக்கு 'பட்டை நாமம்?'

மரண வரி விதிப்பினின்றும் தப்பிக்கத் தந்திரங்கள்

மரணவரி (எஸ்டேட் வரி) மூலம் சர்க்காருக்கு மிகக் குறைந்த அளவில் வருமானம் கிடைப்பது குறித்து இந்திய சர்க்காருக்குச் சிறிது ஏமாற்றம் ஏற்பட்டுள்ளதாம்.

மரண வரியினின்றும் தப்பித்துக் கொள்ள என்னென்ன முறைகள் கையாளப்பட்டு வருகின்றன என்பதைக் கண்டறிய பரிசீலனைகள் நடைபெற்று வருவதாகவும் தெரிகிறது.

மரண வரியினின்றும் தப்பித்துக் கொள்ள ஏமாற்றும் தந்திரங்களில், சொத்துக்களை நெருங்கின உறவினர்களுக்கு விநியோகித்து விடுவதும் ஒன்று என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மரண வரி அமுலுக்கு வந்த சென்ற ஆண்டு அக்டோபர் 10-ந் தேதி முதல் இதுவரையிலும் ரூ. 4 கோடி 50 லட்சம்தான் அவ்வரியின் மூலம் வருமானம் வந்துள்ளதாம். ஆனால் முதன் முதலில் ஆண்டொன்றுக்கு இவ்வரி மூலம் 8 கோடி ரூபாய் வருமானம் கிடைக்குமென எதிர்பார்க்கப்பட்டதாம்.

கிடைத்துள்ள இந்த வருமானம் முழுமையும் விவசாயச் சொத்துக்களல்லாத சொத்துக்கள் மூலம் கிடைத்ததாம். விவசாயச் சொத்துக்கள் மூலம் கிடைத்த வருமானம் எவ்வளவு என்று இன்னும் தெரிவிக்கப்படவில்லை.

ஆயினும் மரணவரி அமுலிலுள்ள 13 மாநிலங்களிலும் வித்தியாசம் இருக்காதென்றும் எதிர்பார்க்கப்படுகிறதாம்.

சிறுவர்கள் புகை பிடிப்பதைத் தடுக்க!

இந்திய சர்க்கார் நட்வடிக்கை?

சிறுவர்கள் புகை பிடிக்கும் பழக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்குத் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான வழிவகைகள் பற்றிப் பரிசீலனை செய்யும்படி இந்திய சர்க்கார், எல்லா மாநில சர்க்கார்களையும் கேட்டுக்கொண்டுள்ளதாம்.

மேலும், 14 வயதுக்குக் குறைந்தவர்கள் புகை பிடிப்பதைத் தடுப்பதற்காக விரைவில் பாராளுமன்றத்தில் சட்டம் இயற்றப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறதாம்.

இட்லரை தோற்கடிக்க 4,100 கோடி பவுன்!

இட்லர் சர்க்காரைத் தோற்கடிக்க மேற்கு ஜெர்மன் சர்க்காருக்கு 4,100 கோடி பவுன் செலவானதாக ஜெர்மன் அதிகாரி ஒருவர் உத்தேசமாகத் தெரிவித்திருக்கிறார்.

இந்தக் கடன்களையும், பொறுப்புகளையும் பைசல் செய்வதற்கான மசோதாவை மந்திரி சபை அங்கீகரித்துள்ளதாம். இதன்படி, இன்னும் 25 ஆண்டுகளில் மேற்கு ஜெர்மன் மக்கள் 42 கோடி பவுனைச் செலுத்த வேண்டுமென்று கோரும் மசோதா ஒன்று விரைவில் ஜெர்மன் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்படலாமாம்.

ஆச்சாரியார்தானு பனம்பள்ளியும்?

சிறை அனுபவித்த பின்னும் 'ஜப்தி' வாரண்டா?

தக்கலை, ஜூன் 16—

திரு—தமிழக விடுதலை போராட்டத்தின்போது சர்க்கார் அலுவலகத்தின் முன் மறியல் செய்து தண்டனை பெற்ற தொண்டர்களுக்கு அன்று நீதிமன்றத்தில் விதிக்கப்பட்ட அபராதத் தொகையை ஈடுசெய்வதற்கு இப்போது ஜப்தி வாரண்டுகள் பிறப்பிக்கப்பட்டிருப்பதாக நம்பகமான செய்திகள் கூறுகின்றன.

அபராதத் தொகையை செலுத்தவில்லை என்றால் கூடுதலாக இத்தனை காலம் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டுமென்று தீர்ப்பில் கூறப்பட்டிருந்ததிற்கேற்ப, தோழர்கள் அபராதம் கட்டமறுத்து, சிறை தண்டனை முழுவதும் அனுபவித்து, விடுதலை பெற்றனர். பல மாதங்களுக்குப் பிறகு இப்போது அபராதத் தொகையை ஈடுசெய்வதற்கென 'ஜப்தி வாரண்ட்' பிறப்பிக்கப்படுவது கண்டு மக்கள் திகைக்கின்றனராம்.

கனுங்கோ குழு அறிக்கைக்கு...!

டி. டி. கே. எதிர்ப்பு?

"கைத்தறிகளை விசைத் தறிகளாக மாற்ற வேண்டுமென்று கனுங்கோ குழு கூறியுள்ள சிபாரிசை ஒப்புக்கொள்ளும்படி நான் மத்திய சர்க்காரை வற்புறுத்த மாட்டேன்,"

என்று, மத்திய சர்க்கார் வர்த்தக, தொழிலமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், கடந்த 3-ந் தேதியன்று புதுடில்லியில் நடைபெற்ற காங்கிரஸ் திட்டக் குழுக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேற்படி குழுவின் சிபாரிசுகளை சர்க்கார் இன்னும் அங்கீகரிக்கவில்லை என்றும், ஆனால். குழு தெரிவித்துள்ள உண்மை விவரங்களை சர்க்கார் ஒப்புக்கொள்ளுகிறது என்றும் அவர் மேலும் தெரிவித்திருக்கிறார்.

'பூதான'க் கொள்கை: நரேந்திரர் எதிர்ப்பு!

இலக்குமணபுரி, ஜூன் 17—

"வர்க்கப் போராட்டத்தில்தான் எனக்கு நம்பிக்கை உண்டு; ஆனால், 'பூமி தான'க் கொள்கையை என்னால் ஒப்புக்கொள்ள முடியாது,"

என்று, மக்கள் 'சோஷலிஸ்டுக் கட்சித் தலைவர் ஆச்சாரியா நரேந்திர தேவ், குறிப்பிட்டிருக்கிறார்.

இந்திய ம. சோ. கட்சிக் கொள்கைகளில் சில மாறுதல்கள் செய்யப்பட வேண்டுமென்றும், வருகிற அக்டோபர் திங்களில் நடைபெற இருக்கும் கட்சியின் மாநாட்டில், அதற்கான யோசனைகளைத் தாம் தெரிவிக்கப் போவதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

குடி உரிமை கோரும் இந்தியர்

மனுக்கள் நிலவரம் பற்றி இலங்கை அதிகாரி

இலங்கைக் குடியுரிமை கோரிச் செய்துகொண்ட இலட்சக் கணக்கான மனுக்களில், 1954-ம் ஆண்டில் 55 சதவீதம் முழுமையுமாக விசாரிக்கப்பட்டுள்ளதாக இலங்கைக் குடியுரிமைப் பதிவு அதிகாரியின் நிர்வாக அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.

இந்த ஆண்டில்தான் (1954) அங்கீகரிக்கப்பட்ட மனுக்கள் சம்பந்தமாக அதிகபட்சமாக—அதாவது 1,371 ஆட்சேபனைகள் வந்தன என்றும், அதற்கு முந்திய ஆண்டுகளில் சொற்பமான ஆட்சேபங்களே வெளிவந்தன என்றும் அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

8 இலட்சத்திற்கும் அதிகமானவர்கள் சார்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 2,37,034 மனுக்களில் 1,32,619 மனுக்கள் அவ்வாண்டில் முழுமையுமாக விசாரிக்கப்பட்டு முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும், தற்போது 46,609 மனுக்கள் விசாரணையிலிருந்து வருவதாகவும், விசாரணை முடிவுற்ற மனுக்களின் பைசல் பல்வேறு கட்டங்களில் இருந்ததாகவும், அவற்றுள் 9,676 மனுக்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாகவும், அந்த அங்கீகரிக்கப்பட்ட மனுக்கள் மூலம் பதிவு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 33,012 என்றும் புள்ளி விவரமும் தரப்பட்டிருக்கிறது

1954-ம் ஆண்டில் மனுக்கள் நிராகரிக்கப்பட்டதைஆட்சேபித்து இலங்கை தலைமை உயர்நீதி மன்றத்தில் 66 அப்பீல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. அவற்றுள் ஒரு அப்பீல்தான் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது; 8 அப்பீல் மனுக்கள் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன. மற்றுமொரு அப்பீல் மனு திரும்பிப் பெறப்பட்டது; பாக்கி 56 அப்பீல் மனுக்களும் பைசலாகாமல் இருந்தன.

இதுபோலவே 1953-ம் ஆண்டில் பாக்கியிருந்த 3 அப்பீல் மனுக்களில் இரண்டு மனுக்கள் 1954-ம் ஆண்டில் பைசல் செய்யப்பட்டதாகவும், ஒரு மனு பைசல் செய்யப்படாமல் பாக்கி இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அப்பீல் செய்யாதாம்!

'அற்ப' காரணங்களுக்காகத் தங்களது குடியுரிமை மனுக்கள் நிராகரிக்கப்பட்டதை ஆட்சேபித்து இலங்கை இந்தியக் குடிகள் அப்பீல் செய்துகொண்டுள்ள வழக்குகளில், தலைமை உயர்நீதி மன்றம் வழங்கும் தீர்ப்பை எதிர்த்து இலங்கை சர்க்கார் அப்பீல் செய்துகொள்ளாது என்று தெரிகிறது.

கழகச் செய்திகள்

சென்னை 35-வது வட்டம் தி. மு. கழகம்

11—6—55 இரவு 8½ மணிக்கு கழக கட்டிடத்தில் நடைபெற்ற கழகச் செயற்குழு கூட்டத்தில், கிளைக் கழகச் சார்பில் இயங்கும் திரு. வி. க. பள்ளியை மீண்டும் ஒன்றுமுதல் ஆறு வகுப்புகளுடன் கட்டாயமாக நடத்துவதென்று முடிவு செய்யப்பட்டது.

சென்னை 14-வது வட்ட தி. மு. கழகம்

12—6—55 பிற்பகலில் நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்தில், 11—6—55 வரை கழக வரவு-செலவு கணக்குகள் பரிசீலிக்கப்பட்டு ஒப்புக் கொள்ளப்பட்டதுடன், ஜுலை மாதத்தில் ஒரு பொதுக்கூட்டம் நடத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

கரூர் தி. மு. கழகம்

29—5—55 மாலை 8 மணிக்கு நடைபெற்ற 18-வதுவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டத்தில், கழகக் கொள்கைகளுக்கு முரணாக நடந்து கொண்ட தோழர் ரெங்கராஜ் என்பவரை ஓராண்டு காலத்திற்கு விலக்கிவைத்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

* * *

அன்று மாலை 6 மணிக்கு கரூர் கருணாநிதி நாடக மன்றத்தின் செயற்குழுக் கூட்டம் நடைபெற்ற போது, மேற்படி மன்றத்தினின்றும் வேலாயுதம் என்பவரையும் விலக்கி தீர்மானிக்கப்பட்டது.

செங்குன்றம் தி. மு. கழகம்

2—6—55 மாலை 6 மணி அளவில், தோழர் எ. கெங்காதரன் தலைமையில் நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்தில், கழகச் சார்பில் ஒரு பொதுக்கூட்டம் நடத்துவதெனவும், சென்னை நகரத்தை அடுத்தும், சென்னை மாவட்டக் கழகத்தில் இதுவரை இணைந்தும் உள்ள சில கிளைக் கழகங்களை செங்கற்பட்டு மாவட்டக் கழகத்துடன் இணைப்பதென செங்கற்பட்டு மாவட்டக் கழகச் செயலாளர் தீர்மானம் நிறைவேற்றியுள்ளதானது, இதுவரை சென்னை மாவட்டக் கழகத்துடன் இணைந்திருந்த கழகங்களை பெரும்பாலும் பாதிப்பதாகவும், மேற்படி வளர்ச்சியுறுத கழகங்கள் செங்கற்பட்டு மாவட்டத்துடன் இணைவதென நேரிட்டால் செலவினங்கள் அதிகமாவதோடு பற்பல கஷ்ட நஷ்டங்களை ஏற்கவேண்டியிருப்பதாலும் செங்கற்பட்டு மாவட்டக் கழகச் செயலாளர் அத்தீர்மானத்தை கைவிடுமாறு வற்புறுத்தியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திருவாரூரில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

3—6—55 மாலை 6 மணிக்கு திருவாரூர் சந்தைத் திடலில், தோழர் அ. சந்தானம் தலைமையில் நடைபெற்ற கழகப் பொதுக்கூட்டத்தில், அண்ணா, மற்றும் தோழர்கள் என். எஸ். இளங்கோ, மதியழகன், பொன்னம்பலனார் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

கவசம்பட்டில் கழகப் பொதுக்கூட்டம்

7—6—55 மாலை 6 மணிக்கு, தோழர் ஜி. சுந்தரம் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர்கள் கருத்தோவியன், போளூர் சுப்பிரமணியம் ஆகியோர் சொற்பொழிவாற்றிய பின்னர், தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் சமுதாயம், பொருளாதாரம், அரசியல் ஆகியவை பற்றி நீண்டதோர் விளக்கவுரையாற்றினார்.

தெற்கியூர் (சிங்களாந்தபுரம்) தி. மு. கழகம்

8—6—55ல், இவ்வூர் சாவடியில், தோழர் எம். வைத்திலிங்கம் தலைமையில் நடைபெற்ற கழக உறுப்பினர்கள் கூட்டத்தில், கடந்த கால வரவு - செலவு பரிசீலிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டதுடன் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பொதுச்செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதை வரவேற்றும், அண்ணா அவர்களின் அரிய பணியினைப் பாராட்டியும், மாநில மாநாட்டிற்கான கிளைக் கழகத்தின் பங்குத் தொகையை செலுத்திவிடுவதெனவும் தீர்மானிக்கப்பட்டதுடன், இவ்வூர் கழகச் செயலாளர் தோழர் எஸ். கே. மாணிக்கத்தின் விலகுதலை ஏற்றுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன

கொண்டலில் (சீர்காழி) தி. மு. க. பொதுக்கூட்டம்

8—6—55 மாலை 6 மணிக்கு கொண்டல் தி. மு கழகச் சார்பில் தோழர் மு. நாசராசன் தலைமையில் நடைபெற்ற கழகப் பொதுக் கூட்டத்தில் தோழர்கள் என். கிட்டப்பா, சௌந்தரராசன் ஆகியோர் பேசிய பின்னர், தோழர் என். வி. நடராசன் அவர்கள் திராவிட நாடு பிரிவினை குறித்தும், சமூக நிலை குறித்தும் நீண்டதோர் சொற்பொழிவாற்றினர்.

நாகையில் தி. மு. கழகப் பொதுக் கூட்டம்

8—6—55 மாலை 6 மணிக்கு, நாகூர் சிவன்தெற்கு வீதியில், தோழர் எஸ். கல்யாணம் தலைமையில் நடைந்த கழகப் பொதுக் கூட்டத்தில், தோழர்கள் எ. எஸ். பாண்டியன், சி. ஜம்பு ஆகியோர் தற்கால அரசியல் நிலையினையும், ஐந்தாண்டுத் திட்ட அக்கிரமங்களையும் விளக்கிப் பேசியபின், தோழியர் அருண்மொழி தி. மு. கழக வளர்ச்சி பற்றியும், காங்கிரசின் ஆவடி 'சோஷலிச மாதிரி' பித்தலாட்டத்தையும், கழக அரசியல், சமுதாய, பொருளாதாரக் கொள்கைகளையும் விளக்கிச் சொற்பொழிவாற்றினர். முடிவில் நாகூரில் பொதுக் கூட்டம் நடத்த நகர பஸ் நிலையத்திற்கு அருகில் உள்ள போலீஸ் இலாகாவுக்குச் சொந்தமான திடலை கட்சி பேதமின்றி அனைவருக்கும் பயன்படும்படி வசதி செய்து கொடுக்கும்படியும், உடனடியாக நாகூரில் உள்ள மருத்துவ விடுதியோடு, பிரசவ விடுதி ஒன்றை நிறுவும்படியும் நகராட்சி மன்றத்தைக் கேட்டுக்கொண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தாத்தையங்கார்பேட்டை தி. மு. கழகம்

10—6—55 மாலை 6 மணிக்கு தோழர் எம். எஸ். என். இராசன் தலைமையில் நடந்த கழகச் செயற்குழுக் கூட்டத்தில், 5—6—55ல் நடைபெற்ற கழகப் பொதுக் கூட்ட வரவு-செலவு கணக்குகள் சரிபார்க்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டதுடன், தி. மு கழக மாநில மாநாட்டுக்கு ரூ. 25 கிளைக் கழகச் சார்பில் தருவதென முடிவு செய்யப்பட்டது. இறுதியில் தோழர் ப. தாண்டவன் அவர்களால் தேநீர் விருந்தொன்று அளிக்கப்பட்டது.

புதுக்கோட்டையில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

12—6—55 ஞாயிறு மாலை 6-30 மணிக்கு, நகர தி. மு. கழகச் சார்பில் காந்தி சதுக்கத்தில், தோழர் ச கு. சங்கரலிங்கம் தலைமையில் நடைபெற்ற கழகப் பொதுக்கூட்டத்தில், தோழர்கள் சண்முகநாதன், நாஞ்சில் கி. மனோகரன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

வடசேரியில் தி. மு. கழகத் துவக்க விழா

11—6—55-ல், வடசேரியில், தி. மு. கழகத் துவக்க விழா தோழர் அ. இரா. மாசிலாமணி தலைமையில் நடைபெற்றது. தோழர் மண்ணை-ப. நாராயணசாமி கழகக் கொடியேற்றினர். தோழர்கள் சிவஞானம், ப. நாராயணசாமி ஆகியோர் கழகக் கொள்கைகளை எடுத்துரைத்தும், சமுதாய சீர்திருத்தம் பற்றியும், அதற்காகத் தி. மு. கழகம் மேற்கொண்டு செயலாற்றிவரும் பணி குறித்தும் சொற்பொழிவாற்றினர்.

மாயூரம் நகர தி. மு. கழகம்

9—6—55 இரவு 8 மணிக்கு, மாயூரம் நகர செயற்குழுக் கூட்டம் தோழர் என். கிட்டப்பா தலைமையில் நடைபெற்றபோது, 23-6-55ல் நடைபெற இருக்கும் கழகப் பொதுக்கூட்டத்தில் மாநில மாநாட்டு நிதி தருவதென முடிவு செய்யப்பட்டது.

வடக்கூர் (தூத்துக்குடி) தி. மு. கழகம்

12—6—55 அன்று, மேற்படி கிளைக் கழகத்தின் 15-வது ஆண்டு விழா சிறப்பாக நடைபெற்றது. அன்று மாலை நகர தி. மு. கழகத்திலிருந்து தோழர்கள் எ துரையப்பன், பி. சிதம்பரம் ஆகியோர் தலைமையில் பெரும் சைக்கிள் ஊர்வலம் நகர முக்கிய வீதிகள்வழியாகச் சென்றது. மாலை 6 மணிக்கு, வ. உ. சி திடலில் தோழர் எஸ். ஓ. வெற்றிவேல் தலைமையில் நடைபெற்ற விழாப் பொதுக்கூட்டத்தில், தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள், தி. மு. கழகத்தின் வளர்ச்சி குறித்தும், கழகக் கொள்கைகள் குறித்தும் விளக்கவுரையாற்றினர். தோழர் சம்பத் அவர்கட்கு பலக் கிளைக் கழகங்கள், மன்றங்கள், சங்கங்கள் சார்பில் மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டது. கூட்டத்தின்போது கழக ஆண்டறிக்கை வாசிக்கப்பட்டதுடன் கழகத்தின் 1955-மார்ச் திங்கள் முடிய உள்ள வரவு-செலவு கணக்குகள் வாசித்துக் காண்பிக்கப்பட்டது. கூட்ட இறுதியில் சில முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கோவில்பட்டி தி. மு. க.

5—6—55 காலை 10 மணியளவில் கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டம் தோழர் வி. ஆர். குருசாமி தலைமையில் நடைபெற்றபோது கழக வரவு-செலவு கணக்கு சரிபார்த்து ஒப்புக்கொள்ளப்பட்டதோடு, கோவில்பட்டிவாழ் பொதுமக்கள், கழகத் தோழர்கள் ஆகியோரின் வசதிக்காக, ஒரு மையவண்டியை (பிரேத வண்டி) கழகச் செலவில் தயாரித்து, தேவைப்படும்போது கொடுத்துதவுவதென முடிவு செய்யப்பட்டதுடன், நெல்லை மாவட்டத்தில் அண்ணா அவர்களின் சுற்றுப்பயணத்திற்குக் கூடிய விரைவில் ஏற்பாடு செய்யும்படி நெல்லை மாவட்ட செயலாளர் தோழர் கே. வி. கே. சாமி அவர்களைக் கேட்டுக் கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பந்தநல்லூரில் கழகப் பொதுக் கூட்டம்

31—5—55 மாலை 6 மணிக்கு தோழர் கோ. வரதராசன் தலைமையில் நடைபெற்ற கழகப் பொதுக் கூட்டத்தில், தோழர்கள் ம. சோ. மணி, அறிவுடை நம்பி, க. அறிவழகன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

கண்டமங்கலத்தில் தி. மு. கழகப் பொதுக் கூட்டம்

12—6—55 மாலை 5 மணிக்கு, மறவர் வேலாயுதம் திடலில், தோழர் செ. நாராயணசாமி தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தோழர் ஆர். முருகையன் அரசியல், சமுதாய சீர்திருத்தம் ஆகியவை பற்றி விரிவுரையாற்றினர்.

சேகல்-மடப்புரம் தி. மு. கழக (கிளை) துவக்கம்

12—6—55 மாலை 6 மணிக்கு திருத்துறைப்பூண்டி வட்டம், சேகல்-மடப்புரத்தில் தி. மு. கழக கிளை துவக்க விழா தோழர் சுப்பையன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் பி. எஸ். எ. ரகீம், டி. எஸ். கல்யாணசுந்தரம், வ. மோகன், ஜி. முத்துகிருஷ்ணன், தலைஞாயிர், மு. அ. செங்குட்டுவன் ஆகியோர் தி. மு. கழக வளர்ச்சியையும், அதன் தத்துவங்களையும் விளக்கி சொற்பொழிவாற்றினர்.

திராவிடநகர் (வேலூர்) தி. மு. க. கிளை துவக்கம்

12—6—55 பகல் 2 மணிக்கு, வேலூர், திராவிட நகர், தோல்கிடங்கு வீதியில் தோழர் மு. அண்ணாமலை தலைமையில் தி. மு. கழக உறுப்பினர்கள் கூடி கிளைக் கழகம் துவக்கினர். பின்னர் கிளைக் கழகப் பொறுப்பாளர்களும், நிர்வாகிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன் அடுத்தத் திங்கள் முதல் வாரத்தில் கழகத் திறப்பு விழாப் பொதுக் கூட்டம் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

ஆரணி தி. மு. கழகம்

12—6—55 இரவு 9 மணிக்கு, தோழர் கா. மு. உமர் தலைமையில் நடைபெற்ற கழக உறுப்பினர்கள் கூட்டத்தில், மாநில மாநாட்டுக்குத் தரவேண்டிய நிதியை 20-6-55-க்குள் கழக உறுப்பினர்கள் தரவேண்டுமெனவும், தோழர் கனகராசன் தமது சொந்த அலுவல் காரணமாகச் செயலாளர் பதவியை ராஜினமா செய்ததை அங்கீகரித்தும், தோழர் பா.சு மணியை செயலாளராகத் தேர்ந்தெடுத்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திண்டுக்கல்லில் தி. மு. க. பொதுக் கூட்டம்

12—6—55 மாலை 6 மணிக்கு சோலைத் திடலில் தோழர் அ. சுப்பையா தலைமையில் நடைபெற்ற கழகப் பொதுக் கூட்டத்தில் தோழர்கள் என். முத்து, எல். வீரராசன் ஆகியோர் பேசியபின், ப. நாராயணசாமி கழகக் கொள்கைகளை விளக்கி நீண்டதோர் உரையாற்றினர். கூட்ட இறுதியில், சென்னை நகர சர்க்கார் பஸ்களில் பெட்ரோலுக்குப் பதிலாக 'டீசல்' எண்ணெயை உபயோகிப்பதால் வண்டி ஓட்டிச் செல்பவர்களுக்குப் புற்று நோய் ஏற்படுவதால், சர்க்கார் உடனடியாக அந்த ஏற்பாட்டை மாற்றி எல்லா பஸ்களையும் பெட்ரோல் எண்ணெயிலேயே இயக்கும்படி சர்க்காரைக் கேட்டுக்கொண்டும், திண்டுக்கல் நகர காய்கறி மார்க்கெட், சந்தையை 'காண்டிராக்ட்'டுக்கு விடாமல் சென்ற ஆண்டைப்போலவே நகராட்சி மன்றமே ஏற்று நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டும் இரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

முதலைப்பட்டி-புதூர் தி.மு.க. பணிமனை திறப்பு விழா

12—6—55 மாலை 5 மணிக்கு முதலைப்பட்டி, புதூரில் தி. மு. கழகப் பணிமனை தோழர் அத்தப்பன் தலைமையில் தோழர் வி. எம். கந்தசாமி திறந்துவைத்தார். தோழர் என். பி. செல்லப்பன் தி. மு. கழகக் கொள்கைகளை விளக்கிப்பேசினர். தோழர் நாச்சிமுத்து அவர்களின் நன்றி கூறலுடன் விழா முடிவுற்றது. விழாவில் கலந்துகொண்டவர்களுக்கு சந்தனம் இனிப்பு வழங்கப்பட்டது.

திருவானைக்காவல் தி. மு. கழகம்

13—6—55 இரவு 10 மணிக்கு, தோழர் எஸ். மருதநாயகம் தலைமையில், கழகப் பணிமனையில் நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்தில், கிளைக் கழகச் சார்பில் மாநில மாநாட்டு நிதிக்கு ரூ. 25 தருவதென முடிவு செய்யப்பட்டது.

அக்கிபேட்டை—பெங்களூர் தி. மு. கழகம்

12—6—55 காலை 9 மணிக்கு தோழர் வி. கே. நடேசன் தலைமையில் நடைபெற்ற கழக உறுப்பினர்கள் கூட்டத்தில் சேலம் மாவட்ட செயலாளர் தோழர் ஜி. பி. சோமசுந்தரம் அவர்கள் தாயார் இயற்கை எய்தியமைக்கு அனுதாபம் தெரிவித்துக் கொண்டும், பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன், அண்ணா ஆகியோருக்குப் பாராட்டும் வரவேற்பும் அளிக்க பெங்களூர் நகரில் ஒரு பொதுக் கூட்டம் நடத்துவதென்றும், கழக நூல் நிலைய வளர்ச்சிக்காக சிறப்புச் சொற்பொழிவுக்கூட்டம் ஒன்று நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

மேட்டூர் அணையில் தி. மு. கழகப் பொதுக் கூட்டம்

13—6—55 மாலை 7 மணிக்கு, தி. மு. கழகச் சார்பில், பொதுஜன சேவா சங்க மைதானத்தில் தோழர் அ. பாலு தலைமையில் நடைபெற்ற கழகப் பொதுக் கூட்டத்தில் தோழர் வெங்கிடாசலம், க. கு. சின்னசாமி ஆகியோர் பேசியபின், தோழியர் அருண்மொழி அவர்கள் 'சோஷலிசம் எது?' என்பது பற்றியும், திராவிட நாட்டுப் பிரிவினையை வலியுறுத்தியும் நீண்டதோர் சொற்பொழிவாற்றினர்.

நல்லமங்கலம் தி. மு. க.

14—6—55 இரவு 8½ மணிக்கு நடைபெற்ற கழகச் செயற்குழு கூட்டத்தில், கழக ஆண்டு விழாவினை ஜுலை முதல் வாரத்தில் நடத்துவதென்று தீர்மானிக்கப்பட்டது.

குரும்பேரி தி. மு. கழகம்

14—6—55-ந் தேதி இரவு 7 மணிக்கு கழக அலுவலகத்தில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் கிளைக்கழகச் சார்பில் மாநில மாநாட்டிற்கு ரூ. 100 தருவதென்றும், இந்நிதியை அண்ணாவின் தலைமையில் உழவன் கலைக்குழுவினர் நடிக்கும் 'தூக்குமேடை' நாடகத்தை நடத்தி, அண்ணா அவர்களிடம் தருவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

தேவகோட்டையில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

இவ்வூர் தி. மு. கழகச் சார்பில் குரு. இதயமணி தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், தோழர்கள் கண்ணதாசன், இராம. வெள்ளையன் சு. ப முத்துராமன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

ஒரக்காட்பேட்டை தி. மு. கழகம்

14—6—55 இரவு நடைபெற்ற கிளைக் கழகப் பொதுக் குழு உறுப்பினர் கூட்டத்தில், மாநில மாநாட்டு நிதிக்காக ரூ. 15 தருவதென்று முடிவு செய்து, மாவட்ட துணைச் செயலாளரிடம் நிதி ஒப்புவிக்கப்பட்டது.

பம்பாய்—கொலாபா தி.மு. கழகம்

10—6—55 இரவு 9½ மணிக்கு தோழர் கே. கே. இராமநாதன் தலைமையில் நடைபெற்ற கழக உறுப்பினர் மாதாந்திரக் கூட்டத்தில், கழக வரவு-செலவு கணக்குகள் சரிபார்க்கப்பட்டு ஒப்புக் கொள்ளப்பட்டதுடன், அடுத்து, சொற்பேச்சு தேர்வுப் போட்டி நடைபெற்றது தோழர்கள் க. சு. செகநாதன், எ. எஸ். தாஸ், எஸ். கே. ராஜு ஆகியோர்கள் சிறந்த பேச்சாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கு கழகச் சார்பாக பரிசுகள் வழங்குவதென்று முடிவு செய்யப்பட்டதுடன், பம்பாய் தி. மு. க. பொதுச் செயலாளர் அவர்களை அழைத்து மாநில மாநாட்டுக்கு நிதி அளிப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

தமிழர்களை துன்புறுத்தும்...

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

நெடுங்காலமாக இந்தக் கப்பல் வழியில் போக்குவரத்தை நடத்தி வந்தவர்கள் 'பி. ஐ. எஸ். என்.' என்ற வெள்ளைக் கம்பெனியாராகும். 'சுதந்திர'த்திற்குப் பிறகு, இந்தியா கம்பெனியாருக்கும், இந்த வழியில் கப்பல்விட அனுமதி கிடைத்ததினால், வெள்ளைக் கம்பெனியின் 'ஏகபோகம்' தகர்க்கப்பட்டது.

1951-ல், சிந்தியா கம்பெனியினர் கப்பல்விடத் துவங்கினதும், வெள்ளையர் கம்பெனி தனது போக்குவரத்தை நிறுத்திக் கொண்டது.

துவக்கத்தில், '15 நாட்களுக்கு ஒரு முறை'யாக இருந்த இந்தக் கப்பல் போக்குவரத்தை, சிந்தியா கம்பெனியார் பின்னர், '20 நாட்களுக்கு ஒரு முறை'யென ஆக்கிவிட்டனர்.

"பர்மா செல்லும் மக்களுக்கு போக்குவரத்து வசதிகளைச் செய்து தரும் முழுப் பொறுப்பையும் சிந்தியா கம்பெனியினர் மேற்கொண்டிருக்கின்றனர்; இப்போது அவர்கள் போக்குவரத்தை நிறுத்தினால் அந்தப் பொறுப்பை நிறைவேற்றாத குற்றத்திற்கு அவர்கள் ஆளாக வேண்டும்;

"பி. ஐ. எஸ். என். கம்பெனியார் போக்கு-வரத்து வசதி தந்து கொண்டிருந்தபோது, சிந்தியா கம்பெனியார் கப்பல் விடுவதை நிறுத்தியிருந்தால், பர்மா செல்லவேண்டிய பிரயாணிகளும், வியாபாரிகளும் இன்றைய நிலை போன்று அவ்வளவு பாதிக்கப்பட்டிருக்க மாட்டார்கள்; ஆனால், இப்போது சிந்தியா கம்பெனியினர் மட்டுமே ஏகபோகமாக இந்தக் கப்பல் வழி போக்குவரத்துக்கு வசதி செய்துதர வேண்டிய நிலையிலுள்ளனர்;

"சென்னை-இரங்கூன் கப்பல் வழி போக்கு-வரத்தை அவர்கள் நிறுத்தினால், விளைவுகள் மிகவும் ஆபத்தானவையாயிருக்கும்,"

என்று, சென்னை கப்பல் பிரயாணிகள் சங்கத்தினர் ஒரு அறிக்கையில் குறிப்பிட்டிருக்கின்றனர்.

இன்று, திருவல்லிக்கேணியில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில், இரங்கூன்—சென்னை கப்பல் போக்குவரத்தை மூடி விடுவது என்ற உத்தேச முடிவை எதிர்த்து கண்டனம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

"10,000 பேர் — பெரும்பாலும் தமிழர்கள், இப்போக்குவரத்து மூடப்படுவதால் அவதிப்படுவர்; அவர்கள், கல்கத்தா வழியாக இரங்கூன் செல்வதற்கு அதிகமான பணம் செலவிட வேண்டியிருக்கும்; சென்னையிலிருந்து இரங்கூனுக்குக் கப்பல் கட்டணம் ரூ 60-தான்; கல்கத்தா வழியாகச் செல்ல, ரூ 30 அதிகமாக இரயில் கட்டணம் தர வேண்டியிருக்கும்; பெரும்பாலானோர் இந்தத் தொகையை செலவிடும் சக்தியற்றவர்களாவர்; மேலும், கல்கத்தா மார்க்கமாக நேர் கப்பல் போக்குவரத்து இல்லை; ஒரு சிலருக்கு மட்டுமே அங்கு பிரயாண வசதி கிடைக்கலாம்; எனவே, ஒருவர் பிரயாணம் செய்வதற்குரிய கப்பல் கிடைப்பதற்காகப் பல நாள் கல்கத்தாவில் காத்திருப்பது சாத்தியமானதல்ல"

என்பன போன்ற கருத்துக்கள், அக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.

"முன்பொரு முறை, கொரிய யுத்தத்தின் போது இந்த சென்னை - இரங்கூன் கப்பல் போக்குவரத்து தடைப்பட்டது; அப்போது போக்குவரத்து மந்திரியாயிருந்த லால்பகதூர் சாஸ்திரி, 'அந்தப் போக்குவரத்து தற்காலிகமாக மட்டுமே நிறுத்தப்பட்டிருக்கிறது,' என்று கூறினார்; பின்பு, மீண்டும் போக்குவரத்து துவங்கிற்று; ஆனால், இப்போது, மீண்டும் பிரயாணிகள் பாதிக்கப்படுவது மிகவும் வருந்தத்தக்கது; இந்தக் கப்பல் போக்குவரத்து நிர்வாகத்திற்கு நஷ்டமேற்பட்டால் அதனை இந்திய சர்க்கார் ஈடு செய்தேனும் தொடர்ந்து போக்குவரத்தை நடத்தச் செய்ய வேண்டும்; இதனைச் செய்யுமாறு சென்னை அரசாங்கம் மத்திய சர்க்காரை வற்புறுத்த வேண்டும்,"

என்றும் அக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

"இந்த போக்குவரத்து நிறுத்தப்படுமாயின், சென்னை மாநிலத்தில் வேலை நிறுத்தம் அதிகமாகும்; இந்தியா—பர்மா நாடுகளிடையே உள்ள வர்த்தக உறவு பாதிக்கப்படும்; எனவே, இந்திய சர்க்கார் வேறு ஏதேனும் கப்பல்களை ஏற்பாடு செய்தாவது, போக்குவரத்து தொடர்ந்து நடைபெற வசதி செய்யவேண்டும்."

"போக்குவரத்து கம்பெனிக்கு இந்த சென்னை—இரங்கூன் கப்பல் வழி இலாபகரமானதாயில்லை என்று தோன்றினால், இப்போதுள்ள கப்பல் கட்டணத்தை 10 அல்லது 15 சதவிகிதம் உயர்த்திக் கொண்டாலும்கூட பிரயாணிகள் ஆட்சேபிக்கமாட்டார்கள்," என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டது.

"பிரயாணிகள் கல்கத்தா வழியாகச் செல்லுவதென்பது மிகவும் கடினமானது; கல்கத்தாவிலிருந்து ஜப்பான் செல்லும் கப்பல், இரங்கூனில் தங்கும்; அந்தக் கப்பலில் ஒரு தடவைக்கு 50 அல்லது 60 பேருக்கு மேல் இடம் கிடைக்கமுடியாது; இதரர்கள் விமானம் மூலம் பிரயாணம் செய்வதென்பதும் அவர்கள் சக்திக்கு அப்பாற்பட்டதாகும்; எனவே, இந்தப் போக்குவரத்து தொடர்ந்து நடைபெறச் செய்வதில், மத்திய சர்க்காருக்கும், சென்னை சர்க்காருக்கும் பெரும் பொறுப்பிருக்கிறது,"

என்றும் தெரிவிக்கப்பட்டதுடன், இந்தப் பிரச்சினைபற்றி ஒரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்தில் டாக்டர் பி. வரதராஜுலு, எஸ். எம். பாசில், எஸ். குருசாமி, ம. பொ. சிவஞான கிராமணியார், டி. கே. சுவாமிநாதன், வி. பாஷ்யம் அய்யங்கார், கே. என். பிள்ளை, வ. எம். ரத்தினசாமி, இராமசாமி சாஸ்திரி ஆகியோர் கலந்துகொண்டனர்.

'உறவு'க்கு நிபந்தனை!

"சோவியத் ரஷ்யாவிலுள்ள எல்லா ஜப்பானியரையும் நிபந்தனையில்லாமல் விடுவிக்க வேண்டுமென்ற நிபந்தனைதான் ரஷ்யாவிற்கும் — ஜப்பானுக்குமிடையே ஒரு 'சமூக உறவு' ஏற்பட வழி கோலும்," என்று ஜப்பான் குறிப்பிடுகிறதாம்.

ஜப்பானிய யுத்தக் கைதிகளும் விடுவிக்கப்பட வேண்டுமெனவும் கோரப்படுகிறதாம்.

35,000 பேர் பயனடையும் லீவு வசதி

லீவு அனுமதி பெற்றுக்கொள்ளாமலேயே ஒரே தடவையில் 6 நாட்களுக்கு அதிகப்படாமல் வேலைக்கு வராதவர்களை மன்னித்து விட்டுவிடுவதென மத்திய சர்க்கார் மேற்கொண்டுள்ள முடிவையொட்டி, இராணுவத் தொழில் நிறுவனங்களில் வேலை செய்யும் 35,000 பேர் பயனடைவர் என்று கூறப்படுகிறது.

கழகக் கூட்டங்கள்

★

முத்துப்பேட்டை

ஏ. எஸ். என். திடலில்
22—6—55 மாலை 6 மணிக்கு
பேசுவோர்:
சி. என். அண்ணாதுரை
அ. பொன்னம்பலனார்
என். எஸ். இளங்கோ
ந. தருமலிங்கம்

★

வெஞ்சமடை (உடுமலை வட்டம்)

எஸ்.வி.-புரம் திரு.வி.க. திடலில்
22—6—55 மாலை 6 மணிக்கு
தலைவர்: பா. வெ. ஜார்ஜ்
கொடியேற்றுபவர்:
வை. காளியப்பன்
பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
ப. நாராயணன்
ஆ. காளிமுத்து

★

வேரையூர்

22—6—55 மாலை 6 மணிக்கு உழகிரி அவையில், தோழர் ந. ரத்தினம் தலைமையில் தி. மு. கழக பொதுக்கூட்டமும், இரவு 9 30 மணிக்கு, பிர்க்கா தி. மு. கழக அமைப்புக் கூட்டமும் நடைபெறும். தோழர் ப. உ. சண்முகம் பேசுவார்.

புதுவையில் வட்டக் குழு அமைப்பு

"26-6-55 காலை 9 மணிக்கு, புதுவை தி. மு. கழகத்தில், தெ. ஆ. மாவட்டச் செயலாளர் தோழர் இரா. சாம்பசிவம் முன்னிலையில், தி.மு.க. புதுவை வட்டக் குழு அமைக்கப்பெறும். அதுபோது, புதுவை அரசியல் தேர்தலில் தி. மு. க. நிலை பற்றி முடிவு செய்யப்படுவதோடு, மாநில மாநாட்டு நிதிக்காக புதுவை வட்டத்தின் பங்குத் தொகையும் தெ. ஆ. மாவட்டச் செயலாளரிடம் அளிக்கப்படும். ஆதலால், புதுவை வட்டத்திலுள்ள எல்லா கிளைகளின் செயலாளர்களும், புதுவை தி. மு. கழகச் செயற் குழுவினரும் அவசியம் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்,"

என்று, புதுவை தி. மு. கழகச் செயலாளர் தோழர் ச. சிவப்பிரகாசம் அறிவிக்கிறார்.

திருமணம்

23—6—55 காலை 9 மணியளவில், வேளூரில், தோழர் இராம. அரங்கண்ணல் அவர்கள் மைத்துனர் தோழர் கோ. வெங்கட்ராமன்—தோழியர் யசோதா திருமணம், தோழர் சி.என். அண்ணாதுரை அவர்கள் தலைமையில் நடைபெறும். தோழர்கள் தில்லை-வில்லாளன், கே. ஏ. மதியழகன், அ. பொன்னம்பலனார், என். எஸ். இளங்கோ ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

க. அறிவழகன்
சுற்றுப்பயணம்
ஜூன் 22: பருத்தியூர்
வாழக்கரை
23. மன்னார்குடி
24: மணலூர்
25: சேவூர் (ஆரணி)
26: சிதம்பரம்

நடவடிக்கை ...?

பம்பாய், ஜூன் 19—டாக்டர் ராம் மனோகர் லோகியாவின் தலைமையில் உள்ள சோஷ்டியினர் ம. சோ. கட்சியிலிருந்து வெளியேற்றப்படுவர் எனத் தெரிய வருகிறது.

ஓவர்ஸீயர் கோர்ஸ்

Inter, S.S.L.C., (தேறிய or தேருத) மாணவர்கள் படிக்கலாம். சர்க்கார் பரீட்சையில் தேறுபவர்கள் ஓவர்ஸீயர் அல்லது டிராப்ட்ஸ்மென் வேலைக்கு தகுதி பெறுகிறார்கள். இந்த வேலைக்கு மாதச் சம்பளம் ரூ. 70/-முதல் அதிகபட்சம் ரூ. 230/- கூட கிராக்கிப்படி ரூ 24/-. எங்கள் ஸ்தாபனம் வேலை வாங்கித் தர உத்திரவாதமளிக்கிறது. ஹாஸ்டல் உண்டு. பிராஸ்பெக்டஸுக்கும், விண்ணப்ப நமூனாவுக்கும் ஒன்பது ஒரு அணா ஸ்டாம்புகள் "பிரின்ஸிபால், காலேஜ் ஆப் இன்ஜினியரிங், (தினமணி டாக்கீஸ் சமீபம்), மதுரை" என்ற விலாசத்திற்கு அனுப்பவும்.

N. K. R. மூர்த்தி, B. Sc. (Engg.)
F. R. E. S. (London) M. I. S. E., A. M. M. E. A.
பிரின்ஸிபால்

'கல் நாட்ட வாரும்..........

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

பின்னர், பத்ருதீன் தூதுக் குழு, மாவட்டக் கழகத் தலைவரை அணுகி, தங்கள் முடிவைத் தெரிவித்தனர்; தலைவரும், 'தனது விருப்பம் நிறைவேற்றப்பட வேண்டும்,' என மன்றுடினர்.

மணிக்கணக்கில் பேசியும், அமைச்சர் பக்தவத்சலம் கல் நாட்டுவதை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டது காங்கிரஸ் தூதுக் குழு.

உள்ளூர் காங்கிரஸ் கட்சியினரின் பிடிவாதத்திற்குப் பணிவதைத் தவிர்த்து வேறு வழி காண முடியாது, அமைச்சரும், தலைவரும், ஊராட்சி மன்றத் தலைவரான கே. இராஜகோபால சாஸ்திரியைக் கூப்பிட்டு, கல்நாட்டு விழாவை ரத்து செய்து விடுமாறு முடிவாகக் கேட்டுக்கொண்டனர்!

விழா ரத்து செய்யப்பட்டபோதிலும், அமைச்சர்கள் பக்தவத்சலத்துக்கும், அழகேசனுக்கும், மாவட்டக் கழகத் தலைவருக்கும், ஊராட்சி மன்றச் சார்பில் வரவேற்பு இதழ்கள் வாசித்தளிக்கப்பட்டன! அன்றலர்ந்த செந்தாமரை போன்று அவர்கள் முகம் இருந்திருக்கும் என எவர்தான் கூற முன் வருவர்?

உத்தேச உயர்நிலைப் பள்ளி கட்டிடத்திற்கான மனையை மராமத்து மந்திரியாக உள்ள சண்முக இராஜேசுவர சேதுபதி கொடுத்திருக்கிறார். எனவே, அவரைக்கொண்டு மேற்படி பள்ளிக்கு கால்கோல் விழாவாற்ற வேண்டும் என்பது, உள்ளூர் காங்கிரஸ் கட்சியினரின் நியாயமான விருப்பமாகும்.

பள்ளியின் கல்நாட்டுதலை அமைச்சர் பக்தவத்சலமும், பள்ளித் திறத்தலை இராஜேசுவர சேதுபதியும் புரிவது என ஏற்கனவே பேசி முடிக்கப்பட்டதாகவும், அதன் பிறகே கல் நாட்டுதலுக்கு அமைச்சர் பக்தவத்சலம் அழைக்கப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது. இருந்தாலும், உள்ளூர் காங்கிரஸ் கட்சியினர், அமைச்சர் பக்தவத்சலம் கல்நாட்டுவதை விரும்பாது, பிடிவாதம் பேசி, அவரை அப்பணியாற்றவிடாது தடுத்து இருக்கின்றனர்!

'இல்லை' என மறுத்துவிட முடியாதே

கல்கத்தா, ஜூன் 18—

"மே.வங்க சர்க்கார் அகதிகளுக்கு ஏராளான நிலமும், ரொக்கமும் மானியமாகத் தருவதாக நிலவும் வதந்தியே கிழக்கு வங்கத்திலிருந்து ஏராளமான பேர் ஓடிவருவதற்கு முக்கிய காரணம்,"

என்று, பாக். பிரதமர் முகம்மது அலி பத்திரிகையாளரிடம் கூறியிருக்கிறார்.

சாதாரண மனிதர்தானும்...!

ஐதராபாத், ஜூன் 19—

"இந்திய அரசியல் சட்டம் எல்லோருக்கும் சரிசம சந்தர்ப்பம் அளிக்கிறது;

"எனக்கு பொது மக்கள் தரும் அன்பளிப்புகளை வைப்பதற்குக் கூட எனக்குச் சொந்தமாக ஒரு இடம் இல்லை; நான் ஒரு சாதாரண மனிதனே,"

என்று, குடியரசுத் தலைவர் டாக்டர் இராசேந்திரர் குறிப்பிட்டாராம்.

ரஷ்யாவிலிருந்து வெளியேற்றப்பட்டனர்

மாஸ்கோவிலுள்ள 3 அமெரிக்கத் தூதுவராலயத் துணை அதிகாரிகளை ரஷ்ய சர்க்கார் வெளியேற்றி விட்டதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த மூன்று பேர்களும் 'முறை தவறி' நடந்துகொண்டதாக ரஷ்யா குற்றம் சாட்டி அவர்களை 'விரும்பத் தகாதவர்கள்' என்று தெரிவித்திருக்கிறதாம்.

நிசாமின் சொத்துக்கள் பணமாகின்றன!

ஐதராபாத், ஜூன் 16—

ஐதராபாத் இராஜப்பிரமுகரான நிசாம், தமது சொத்துக்களை விற்றுப் பணமாக்கிக்கொண்டு வருவதாகக் கூறப்படுகிறது.

அண்மையில் நிசாமின் ஏஜெண்டொருவர், அவுரங்கபாத்திலுள்ள நிசாமின் நிலங்களை விற்றிருக்கிறாராம்.

இப்பொழுது ஐதராபாத்திலுள்ள 4 கிணறுகளையும் ஒரு வீட்டையும் விற்க அங்குள்ள ஏலக்காரர் ஒருவர் 'நோட்டீஸ்' பிறப்பித்துள்ளாராம்.

நாணயமுறை மாற்றத்திற்கு ரூ. 4 கோடி செலவு

தசாம்ச நாணய முறை, நிறுத்தல் அளவைகளை நாட்டில் ஏற்படுத்துவதற்கு முதல் 5 ஆண்டுகளில் ரூ 4 கோடி செலவாகும் என்று மத்திய சர்க்கார் வர்த்தக, கைத் தொழில் இலாகா உதவி மந்திரி கனுங்கோ கூறியிருக்கிறார்.

ஆக்க வேலைகளுக்கு அணுசக்தி ஒப்பந்தம்

ஆக்க வேலைகளுக்கு அணுசக்தியைப் பயன்படுத்துவது சம்மந்தமாக பிரிட்டன், கனடா, பெல்ஜியம் ஆகிய நாடுகளுடன் அமெரிக்கா ஒப்பந்தம் ஒன்று செய்துள்ளதாகத் தெரிகிறது

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.